




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (17.6.2024) முகாம் அலுவலகத்தில், "நான் முதல்வன் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) இணைந்து நடத்திய S.C.O.U. S.C.O.U.T (Scholars for Outstanding Undergraduate Talent in Tamil Nadu) திட்டத்தில் இங்கிலாந்தின் டர்ஹம் பல்கலைக்கழகத்தில் தரவு அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் நேரடி பயிற்சி பெற்று தாயகம் திரும்பிய 25 மாணவ, மாணவியர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்த நிகழ்வின்போது, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. இன்னசென்ட் திவ்யா, பிரிட்டிஷ் கவுன்சிலின் தென்னிந்தியாவிற்கான இயக்குநர் திருமதி. ஜனக புஷ்பநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ்

# இங்கிலாந்து சென்று திரும்பிய மாணவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஜூன் 18-

“நான் முதல்வன்” திட்டத்தின்கீழ் இங்கிலாந்து சென்று திரும்பிய மாணவர்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான “நான் முதல்வன்” திட்டமானது. கடந்த 1.3.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது, இந்த மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான திட்டமானது ஈராண்டுகளைக் கடந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்று, வேலைவாய்ப்புகளையும் பெற்று வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக, நான் முதல்வன் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) இணைந்து நடத்திய S.C.O.U.T (Scholars for Outstanding Undergraduate Talent in Tamil Nadu) திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகளில் இருந்து மொத்தம் 1267 விண்ணப்பங்கள் வந்தநிலையில், அவற்றிலிருந்து 100 மாணாக்கர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் முதலில் 24 மணி நேர ஆன்லைன் பயிற்சியில் பங்கேற்று, அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 மாணவர்களும், 14 மாணவியர்களும், ஜூன் 9 முதல் 16 வரை இங்கிலாந்தின் Durham பல்கலைக்கழகத்தில் தரவு அறிவியல் (Data Science) மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆகிய முன்னணித் துறைகளில் ஒரு வார காலம் நேரடியாகப் பயிற்சி பெற்றனர்.

இத்திட்டம் தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமையான கல்லூரி மாணவர்களுக்குச் சர்வதேச அனுபவம் மற்றும் மேம்பட்ட திறன்களைப் பெறுவதற்கான அரிய வாய்ப்புகளைத் தந்துள்ளது.

இத்திட்டத்திற்காக, மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களின் பயணம், தங்குமிடம் மற்றும் பயிற்சி முதலிய செலவுகளை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து ஏற்றுக் கொண்டுள்ளன.

S.C.O.U.T பயிற்சி பெற்று தமிழ்நாடு திரும்பிய இந்த 25 மாணவர்களும், நேற்று (17.6.2024) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில் நேரில் சந்தித்து தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, அவர்களின் வாழ்த்துகளையும் பெற்றனர். இவர்களில் 20 மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர். அவர்களில் சுஜாதா குப்புசாமி மற்றும் கிருத்திகா துளசிமணி ஆகிய 2 மாணவிகள் “புதுமைப் பெண்” திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின்போது, வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர்1 நா.முருகானந்தம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னசென்ட் திவ்யா, பிரிட்டிஷ் கவுன்சிலின் தென்னிந்தியாவிற்கான இயக்குநர் திருமதி ஜனக புஷ்பநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

